

# மாவீரர்நாள் பேச்சுப்போட்டி 2023

**பிரிவு – 12 வயது (வகுப்பு 7)**

## மாவீரர் நாள்

கார்த்திகை 27 …

எங்கள் மாவீரர் நாள் … தமிழர் வாழுமிடமெங்கும் எங்கள் மாவீரரை நெஞ்சிலிருத்தி உறுதி பூணும் நாள். ஆயிரம் ஆயிரமாய் ஆகுதியான எங்கள் சொந்தங்களை நினைவு கூரும் நாள் … முதல் வேங்கை சங்கர் மாமா மண்ணில் விதையாய் வீழ்ந்த நாள் …

‘மாவீரர் யாரோ என்றால் மரணத்தை வென்றுள்ளோர்கள்’

ஆம்! மாவீரர்கள் மரணித்தபோதும், அவர் பெயரும் புகழும் அழியாது வாழ்கிறது, வரலாறாக…

இளவயதின் சுகங்கள் துறந்து, தாய் மண்ணே பெரிதென்று எண்ணித் துணிந்தவர்கள் இவர்கள். வரியுடை தரித்து கடல், தரை, ஆகாயம் என எங்கும் சுழன்று தமிழீழத் தாயின் விடுதலையையே உயிர் மூச்சாகச் சுவாசித்தவர்கள் இந்த வீர மறவர்கள்.

இவர்கள் தமக்கென வாழாத புனிதர்கள். எங்களின் நல்வாழ்வும் தமிழீழ மண்ணின் விடுதலையுமே இவர்களது குறிக்கோள். எனவேதான் விதையாகி வீழ்ந்தார்கள் விருட்சமாவோம் என்ற நம்பிக்கையுடன்.

இந்த மாவீரர்களின் இலட்சியம் நிறைவேறியதா மக்களே? அவர்கள் பெரும் கனவுகளுடன் சிறுகச் சிறுகக் கட்டியெழுப்பிய நம் மண்ணின் இன்றைய நிலையைப் பார்த்தீர்களா சொந்தங்களே! ஒரு கணம் சிந்தியுங்கள்.

மாவீரர்களது கனவை நிறைவேற்றாது விட்டால் காலம் எம்மீது பழிசொல்லாதா? எம் குற்ற உணர்வே எங்களைக் கொல்லாதா? சொல்லுங்கள்!

உறவுகளே! எம்மிடம் அறிவும் ஆற்றலும் உள்ளது, உலகப்பரப்பில் மாற்றங்களைக் கொண்டு வரும் திறன் உள்ளவர்கள் நாங்கள். எம்மண்ணின் விடுதலைக்கு அதனைப் பயன்படுத்துவோம். தமிழீழம் காண்போம், மாவீரர் கனவை நனவாக்குவோம் என்று, கல்லறை மேனியர் கண் திறக்கும் இந்தக் கார்த்திகை நாளிலே உறுதியெடுப்போம்.

மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழ்மீது உறுதி!

வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன் வரலாறு மீதிலும் உறுதி!

விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை வீரர்கள் மீதிலும் உறுதி!

இழிவாக வாழோம்! தமிழீழப் போரில் இனிமேலும் ஓயோம் உறுதி!

நன்றி!

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.